பதிவஞ்சல் ஒப்புகையுடன்

# சென்னை–6, குடும்ப நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ஆணை

## முன்னிலை: மரு.வி.பி.ஹரிசுந்தரி,எம்பிபிஎஸ்,டிசிஎச்.,

ந.க.எண்.5293/குந/நி1/2022 நாள்:04.08.2022

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் –பணியிடை மரணமடைந்த திரு.துளசிராம் என்பவரது மகன் திரு.து.தினேஷ்பிரபு – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.19830/குந/நி1/2008, நாள் 29.12.2020.
2. சேலம் மாவட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கண்காணிப்பாளரின் கடித எண்.556//நி/2022, நாள்:23.05.2022
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, (Q1) நாள்.23.01.2020.

*******

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் அதன் தொடர்புடைய ஆணையின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகள் 10 (ஏ) (1) ன் கீழ் திரு.து.தினேஷ்பிரபு (த/பெ (லேட்) திரு.துளசிராம், பண்டக காப்பாளர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வடுகப்பட்டி சேலம் என்பவர் கருணை அடிப்படையின் கீழ் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சேலம் மாவட்டம், வடுகப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பண்டக காப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.துளசிராம் என்பவர் 25.11.2003 அன்று பணியிடை மரணமடைந்துள்ளார் அவர் அப்பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கப் பெற்றவர். அவரின் பிறந்த தேதி 09.12.1966 என்பதால் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள்:31.12.2024 ஆகும். எனவே பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மகன் திரு.து.தினேஷ்பிரபு என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி உரிய காலகெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். அவரின் பிறந்த தேதி 25.05.1991 அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாலும் திரு.து.தினேஷ்பிரபு என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு சென்னை-06 குடும்நல இயக்ககத்தில் பணியமர்த்தப்பட்டார். தனியர் 11.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து

வருகிறார். தற்போது 02.03.2021 முதல் சேலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் இணைந்த நாளான 11.01.2021 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குமாறு சேலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் மீது நாளதுவரை எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என சான்றளித்துள்ளார்.

எனவே, பார்வை (3)-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.து.தினேஷ்பிரபு என்பவரின் தற்காலிக பணியினை அன்னார் இளநிலை உதவியாளராக அவர் பணியில் இணைந்த நாளான 11.01.2021 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்த பின்னர் தனியருக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மரு.வி.பி.ஹரி சுந்தரி,
குடும்பநல இயக்குநர்.

பெறுநர்
திரு.து.தினேஷ்பிரபு
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை,
சேலம்

நகல்

1. மருத்துவமனை கண்காணிப்பாளர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம் - 636 302
2. தனியரின் பணிப்பதிவேடு.
3. இருப்புக்கோப்பு
4. உபரி.

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

Endt. NO: 556/E/22.

O/o. SUPERINTENDENT
E.S.I. Hospital
SALEM
Dt: -10.22

ஒ கண்காணிப்பாளர்
கண்காணிப்பாளர்.
4/8/22

forwarded.
To,
Thiru. T. Dinesh Prabhu, JA
ESI Hospital, Salem

SUPERINTENDENT
E.S.I. Hospital
SALEM
31/10/22